## 9. திருச்சீரலைவாய்.



*பண் – பஞ்சமம்.*

**ப**னியருட் சேஷா பவளச்செவ் வாயா
பச்சைமா லயன்பணி பாதா
புனித குணாளா புகழ்பவர் தோழா
பொன்றிடா வண்டர்தம் பரனே
எனைமறக் காதிங் கருளிசைப் பவனே
யெழிற்செழுஞ் சீரலை வாயா
தனிநிலைச் சுகனே யுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 1

**ந**ண்ணுவா ருறவே யெண்ணுவா ரிறையே
நான்மறை முடிவிற்சொல் பொருளே
மண்ணும்வா னகமும் பண்ணுமாள் வினைஞா
மட்டிலா நடனவெம் பரனே

---

*9. **மயம்** "மயன்" எனப் போலியாயிற்று, அழகென்பது பொருள்; **நிகண்டுகள்** காண்க.*

உண்ணும்வா னமுதே கன்னலா ரிழுதே
யுயர்நிலைச் சீரலை வாயா
தண்ணமார் சரணா வுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 2

**து**டியிடைக் குறமா தணிமடச் சுரமா
துடையரு மாமணத் தோழா
நடமயிற் பரியா பிரியகப் பிரியா
நானடி தொழுநறும் பரனே
சுடர்மணித் தளையா வடலயிற் றலைவா
துணிநிலைச் சீரலை வாயா
தடவருட் புரணா வுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 3

**அ**ருளகக் கலியே லயமுதிப் பிலியே
யமுத சுகோதயப் பிழம்பே
தெருண்மணித் திரளே குருமணிப் பொருளே
தீவினை தீக்குமெம் பரனே
மருமலர்க் கரனே யடிகளுக் கரனே
மணிநிலைச் சீரலை வாயா
தருணதற் பரனே யுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 4

**கி**ளர்சிவக் கொழுந்தே தவர்மனக் கரும்பே
கெழுவருண் மாமணிக் குலமே
வளர்நலக் கிழியே யகவிளக் கொளியே
மனமய றீர்க்குமெம் பரனே
களிமனத் துமையா ளருள்ரசக் கனியே
கயநிலைச் சீரலை வாயா
தளைமணிச் சரணா யுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 5

---

***3. பிரியகம்*** = *கடம்பு; ப்ரியகம் என்பது வடமொழி.*

***5. கயநிலை*** = *நீர்நிலை.*

**த**மநிறங் காட்டா வியன்வெளிக் கூத்தா
சங்கரா பண்டைமா தேவா
சுமனச மௌலீ திமிரமில் சோதீ
சுந்தரா தொண்டனேன் பரனே
இமையவர் ஞாட்பா நிறைவுடை யாப்தா
வெழினிலைச் சீரலை வாயா
சமரச சுகுணா வுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 6

**சு**குணபொக் கிஷமே விகதபெட் டகமே
சுதைபழுத் தொழுகுகற் பகமே
இகுளையுற் றுயர்வோர் பிரபலப் பொருளே
யெந்தையே தொண்டனேன் பரனே
விகலமற் றொளிர்மா தவபலச் சுடரே
வியனிலைச் சீரலை வாயா
சகலவற் புதனே யுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 7

**பு**லனொடுக் கிடுவோ ரகநடிப் பவனே
புந்தியார் பூத வனீகா
சிலைமதன் படிவம் பொடிபட விழித்தோர்
செல்வனே வல்லவெம் பரனே
அலைகடற் றிரைவீ சொலிமலி வளநா
டகழ்நிலைச் சீரலை வாயா
சலமலர்ச் சரணா வுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 8

**து**திபணிப் படிப்போர் விதியினைக் கிழிப்போய்
சுபகரச் செருக்கினைத் தருவோய்
முதுமறைக் கவைக்குண் ணிதமொளித் திருப்போய்
மொடுமொழி கூறுமெம் பரனே

---

*7. **விகதம்** = (பூதம்-) தூய்மை, ஏகாந்தம் ; விவிக்தம் என்பதன் விகாரம். "விவிக்தே பூத விஜநௌ" என்பது **நாநார்த்தவர்க்கம்.** **சுதை** = அமிர்தம் ; **தகரவெதுகை** காண்க. **விகலம்** = குறைபாடு ; **பிங்கலந்தை** காண்க.*

இதமரைக் கமலா சனத்துறை குமரா
விளைநிலைச் சீரலை வாயா
சததளச் சரணா வுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 9

**ப**வமழிப் பவனே சிவமளிப் பவனே
பரிவுடைத் துவிநவ நயனா
நவமொழிப் புகழ்ப்பாச் சொலினவர்க் கிறையே
நச்சினார்க் கினியவெம் பரனே
உவமையிற் படியா வடிவுடைத் திருவே
யுறைநிலைச் சீரலை வாயா
தவவருட் சனகா வுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே. 10

நந்தன வருடம் பங்குனி மாதம் 17ஆம் தேதி மங்களவாரம்.